ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ கம்பமா ॥

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கம்பமா ॥

## திருவண்புருடோத்தமம்

‡கம்ப மா கடல் அடைத்திலங்கைக்கு மன்⋆
கதிர் முடி அவை பத்தும்
அம்பினால் அறுத்து⋆ அரசவன் தம்பிக்கு⋆
அளித்தவன் உறை கோயில்⋆
செம் பலா நிரை செண்பகம் மாதவி⋆
சூதகம் வாழைகள் சூழ்⋆
வம்புலாம் கமுகோங்கிய நாங்கூர்⋆
வண் புருடோத்தமமே (1)

பல்லவம் திகழ் பூங்கடம்பேறி⋆ அக்-
காளியன் பணவரங்கில்⋆
ஒல்லை வந்துறப் பாய்ந்தரு நடம் செய்த⋆
உம்பர் கோன் உறை கோயில்⋆
நல்ல வெந் தழல் மூன்று நால் வேதம்⋆ ஐ
வேள்வியோடாறங்கம்⋆
வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர்⋆
வண் புருடோத்தமமே (2)

அண்டர் ஆனவர் வானவர் கோனுக்கென்று⋆
அமைத்த சோறதுவெல்லாம்
உண்டு⋆ கோ நிரை மேய்த்தவை காத்தவன்⋆
உகந்தினிதுறை கோயில்⋆
கொண்டலார் முழவிற் குளிர் வார் பொழில்⋆
குல மயில் நடம் ஆட⋆
வண்டு தான் இசை பாடிடு நாங்கூர்⋆
வண் புருடோத்தமமே (3)

www.prapatti.com

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து⋆ அதன்
    பாகனைச் சாடிப் புக்கு⋆
ஒறுங்க மல்லரைக் கொன்று⋆ பின் கஞ்சனை
    உதைத்தவன் உறை கோயில்⋆
கரும்பினூடுயர் சாலிகள் விளை தரு⋆
    கழனியில் மலி வாவி⋆
மருங்கெலாம் பொழில் ஓங்கிய நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (4)

சாடு போய் விழத் தாள் நிமிர்த்து⋆ ஈசன் தன்
    படையொடும் கிளையோடும்
ஓட⋆ வாணனை ஆயிரம் தோள்களும்⋆
    துணித்தவன் உறை கோயில்⋆
ஆடு வான் கொடி அகல் விசும்பணவிப் போய்ப்⋆
    பகலவன் ஒளி மறைக்கும்⋆
மாட மாளிகை சூழ் தரு நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (5)

அங்கையால் அடி மூன்று நீர் ஏற்று⋆ அயன்
    அலர் கொடு தொழுதேத்த⋆
கங்கை போதரக் கால் நிமிர்த்தருளிய⋆
    கண்ணன் வந்துறை கோயில்⋆
கொங்கை கோங்கவை காட்ட⋆ வாய் குமுதங்கள்
    காட்ட மா பதுமங்கள்⋆
மங்கைமார் முகம் காட்டிடு நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (6)

உளைய ஒண் திறல் பொன் பெயரோன்⋆ தன-
    துரம் பிளந்துதிரத்தை
அளையும்⋆ வெம் சினத்தரி பரி கீறிய⋆
    அப்பன் வந்துறை கோயில்⋆
இளைய மங்கையர் இணையடிச் சிலம்பினோடு⋆
    எழில் கொள் பந்தடிப்போர்⋆ கை

www.prapatti.com

வளையின் நின்றொலி மல்கிய நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (7)

வாளையார் தடங்கண் உமை பங்கன்⋆ வன்
    சாப மற்றது நீங்க⋆
மூளையார் சிரத்தைய முன்னளித்த⋆ எம்
    முகில் வண்ணனன் உறை கோயில்⋆
பாளை வான் கமுகூடுயர் தெங்கின்⋆ வன்
    பழம் விழ வெருவிப் போய்⋆
வாளை பாய் தடம் சூழ் தரு நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (8)

இந்து வார் சடை ஈசனைப் பயந்த⋆ நான்
    முகனைத் தன் எழில் ஆரும்⋆
உந்தி மா மலர் மீமிசைப் படைத்தவன்⋆
    உகந்தினிதுறை கோயில்⋆
குந்தி வாழையின் கொழுங்கனி நுகர்ந்து⋆ தன்
    குருளையைத் தழுவிப் போய்⋆
மந்தி மாம்பணை மேல் வைகும் நாங்கூர்⋆
    வண் புருடோத்தமமே (9)

‡மண்ணுளார் புகழ் வேதியர் நாங்கூர்⋆
    வண் புருடோத்தமத்துள்⋆
அண்ணல் சேவடிக் கீழ் அடைந்துய்ந்தவன்⋆
    ஆலி மன் அருள் மாரி⋆
பண்ணுளார் தரப் பாடிய பாடல்⋆ இப்-
    பத்தும் வல்லார்⋆ உலகில்
எண்ணிலாத பேர் இன்பம் உற்று⋆ இமையவ-
    ரோடும் கூடுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com